


ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, நங்கநல்லூர் கூட்டுறவு பண்டகசாலைக்கு உட்பட்ட நியாய விலைக் கடையில், பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ. 3,000/– ரொக்கம் ஆகியவற்றை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பொதுமக்களுக்கு வழங்கினார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், வட்டச் செயலாளர் உலகநாதன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில்

# திராவிடப் பொங்கல் திருவிழா - 8,456 பேருக்கு பொங்கல் பொருட்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, ஜன.10–

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் திராவிட பொங்கல் திருவிழா இன்று (10.01.2026 – சனிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில், சென்னை பெரியார் நகர், கொளத்தூர் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் பொங்கல் வைத்து கொண்டாடி தொடர்ந்து சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் கொளத்தூர் தொகுதி கழக நிர்வாகிகள் 3917 பேருக்கும்,

தொடர்ந்து அப்பள்ளியின் மற்றுமொரு வளாகத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி பெற்ற/பெறுகின்ற 4500 மாணவர்கள், கபாலீஸ்வரர் கல்லூரியில் பணியாற்றும் 39 அலுவலர்கள் என 8,456 பேருக்கு பொங்கல் பொருட்கள், புத்தாடைகள் மற்றும் பரிசுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று தன் பொற்கரங்களால் வழங்கி பொங்கல் வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றுகிறார்.

இந்த இனிய பொங்கல் திருநாளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, இரா. கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன்.எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், இரா.விடுதலை, ஐ.சி.எப்.வ.முரளி தரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதாமகேஷ்குமார் எம்.சி, எஸ். பன்னீர்செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம. அசோக்குமார், எஸ்.தன சேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ,பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி. ஊமைத்துரை, கே.பி.ஆதவன் மணி, என்.பொன்முடி, கே. ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச் செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டப் பணிகளின்

# தன்னார்வலர்களுக்கு தொப்பி - கைபேசி இணைப்புகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, ஜன. 10–

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை மாவட்டத்தில் “உங்க கனவ சொல்லுங்க” திட்டப் பணிகளை மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைபேசி இணைப்புகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2026) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, பாடியநல்லூரில் “உங்க கனவ சொல்லுங்க” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று கடந்த ஐந்து ஆண்டுகளில் அமல்படுத்தப் பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் “உங்க கனவ சொல்லுங்க” என்ற திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

“உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 1.91 கோடி கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்கள் பயன்பெற்ற திட்டங்கள் மற்றும் கனவுகளை கண்டறியும் களப்பணி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் 50,000 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துகளை பதிவு செய்ய தனியாக கைபேசி செயலி இதற்கென உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு முறை செல்வர். முதல் முறை வீட்டிற்கு செல்லும் போது விண்ணப்ப படிவத்தினை குடும்பத் தலைவர் / உறுப்பினரிடம் வழங்குவர். அவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசு திட்டங்களின் பெயர் பட்டியல் விவரங்களை அவர்களிடம் தெரிவித்து, படிவத்தினை பூர்த்தி செய்து தரும்படி கோருவர்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தினை சரிபார்த்து கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்வர். கைபேசி செயலியில் பதிவேற்றிய பின்னர் அக்குடும்பத்திற்கு தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டையினை வழங்குவர். இந்த அட்டை மூலம் WWW.UKS.TN.GOV.IN என்ற இணையதளத்தில் தங்களது கனவு/கோரிக்கையின் நிலை குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்த “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தின் கீழ், சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெற்ற காணொலி காட்சி நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “உங்க கனவ சொல்லுங்க” திட்டப் பணிகளை சென்னை மாவட்டத்தில் மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு தொப்பி மற்றும் கைபேசி இணைப்புகளை வழங்கினார்.

மேலும் தன்னார்வலர்களிடம் தங்கள் கனவினை தெரிவிப்பவர்களுக்கான தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டைகளையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி. சேகர், த.வேலு, இ. பரந்தாமன், மருத்துவர் நா. எழிலன், ஆர். மூர்த்தி, அ. வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன்,, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நிலைக் குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கே.நீலகண்டன் தலைமை: சென்னை தெற்கு மாவட்டம் – விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# துணை முதல்வர் பிறந்த நாள் மாபெரும் ஒருநாள் எழுவர் கால்பந்து போட்டி!

### அமைச்சர் மா. சுப்பிரமணியன் சிறப்புரை! டி.ஆர்.பாலு எம்.பி. – தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜன.10

சென்னை தெற்கு மாவட்டம் - விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதல்வர் பிறந்த நாள் மாபெரும் ஒருநாள் எழுவர் கால்பந்து போட்டி கே.நீலகண்டன் தலைமையில் நாளை (11.1.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு டாக்டர். அம்பேத்கர் விளையாட்டு திடல், முகப்பேர். சென்னை-37.-ல் நடைபெறுகிறது.

இதில் பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அ.ம.துரை வீரமணி, எம்.எம்.ஜெயரத்தினம், எம்.ஏ.செந்தில்சுரேஷ், கே.குமரேசன், ஆர்.கர்ணல், ஆ.மாலினி, தீ.பாலாஜி, எம். உதயகுமார், எஸ்.மாதவன், எம்.கே.பி.அண்ணதாசன், ப.ஆலன், சி.சசிக்குமார், எம். ரூபன், ரமணிமாதவன் எம்.இ.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வே.கௌதம், நிவேதா, ஜெசிகா, ஆர்.கோபால்ராம், சுரேஷ், ஜெ.மனோகரன், எ.ஜி.வேலன், மோ.எழில், மோகன்குமார், எஸ்.கார்த்திக், இரா.பாஸ்கரன், ஆர்ஆனந்த், கே.பிரபு, செ.சதீஸ், டி.எசக்கிவேல், செந்தில்குமார், எஸ்.சுரேஷ், பிரபாகரன், இரா.தமிழன்பன், வே.கிஷோர்குமார், ச.ஜெயராமன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இதில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா. சுப்பிரமணியன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க.கணபதி, அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.அருணாச்சலம், க.தனசேகரன், காசிமுத்து மாணிக்கம், PT.பாண்டியசெல்வம், க.சோமு, பி.மணிமாறன்:, ரத்னா லோகேஸ்வரன், பத்மபிரியா, S.குணசேகரன், த. விஸ்வநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி, பருத்திப்பட்டில் உள்ள மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் மகா எக்ஸ்போ –2026 எனும் பள்ளி மாணவர்களுக்கான கல்வி கண்காட்சி நடைபெற்றது இதில் அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர், அன்பில் மகேஷ் பொய்யா மொழி ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சி முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள், இதில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், கல்லூரி நிர்வாக இயக்குநர் சு.கு.திருக்குமரன் கல்லூரி முதல்வர் முனைவர் அனிதா ராமன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன, ப.ச.கமலேஷ், உள்பட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளிலிருந்து சுமார் 7,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.





சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை ஏற்பாட்டில், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு முன்னிலையில், கஸ்தூரிபாய் காந்தி அரசு மகப்பேறு மருத்துவமனையில் பிறந்த 58 குழந்தைகளுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தங்க மோதிரம் அணிவித்தார். கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன் குழந்தைகளுக்கு புத்தாடை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், ஐ.கென்னடி, வி.எஸ்.கலை, ஜெ.அகஸ்டின் பாபு. ஆர்.சங்கீதா வே.கமலா செழியன் எஸ்.யோகேஸ்வரி, வி.பி.பொன்னரசு, வி.என்.ராஜன், ப.பிரகாஷ், இ.இளம்பாரதி, ஜே.எம். எஜ்.இம்ரான், ம.தயாநிதி, சி.தினகரன், லைனர்.கே.பிரபு, க.வே.மோகன், ஐ.சி.எப்.சங்கர், ஜெ.விஜயகுமார், எஸ்.சசிகுமார், அ.தமிம் அன்சாரி, ஏ.பி.வேலு, எம் கலீல் ரகுமான், ஆர்.சசிகுமார், ஆர்.கஜேந்திரன், எம்.எ.சஜ்ஜாத், பி.தேசராணி, சித்ரா செழியன், வே.சவ்வுந்தர், மு.ஜோதிஸ்வரன், டி.ஜெபஸ்டின், சி.வாசன், ஜெ.அன்பரசு, ஆ.காமாட்சி, எம்.எஸ்.வசந்த், கோ.தனசேகர், ச.ரமேஷ், ஆர்.ராதா கிருஷ்ணன், சி.மீனா, க.கற்பகவள்ளி, சு.கற்பகம்,, உ.ஹேமாவதி, எஸ்.சாந்தி, ஜெ.மைதிலி, பி.ஜெயலட்சுமி, எஸ்.கல்பனா, ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தைத்திருநாளை முன்னிட்டு,

# 18,000 ஒருகால பூசைத்திட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு புத்தாடைகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கி தொடங்கி வைத்தார்!



சென்னை, ஜன.10

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (09.01.2026) சென்னை, நுங்கம்பாக்கம், ஆணையர் அலுவலகத்தில் 2025-2026 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் தமிழர் நாளாம் தைத்திருநாளை முன்னிட்டு 18,000 ஒருகால பூசைத்திட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு புத்தாடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சென்னை மண்டலத்தைச் சேர்ந்த 100 அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு புத்தாடைகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பிறகு தொன்மையான திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளோடு, திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு பாதுகாத்து வருகின்ற ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும்.

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு, 2,122 திருக்கோயில்களின் 4,193 அர்ச்சகர்களுக்கும். இரண்டு இணை புத்தாடைகள் மற்றும் 9,348 பணியாளர்களுக்கும் இரண்டு இணை சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் ஒருகால பூசைத் திட்டத்தில் இருக்கின்ற 18,000 திருக்கோயில்களுக்கும் இந்த ஆண்டு முதல் புத்தாடைகள் வழங்கும் நிகழ்வை தொடங்கி வைத்துள்ளோம்.

1986-ஆம் ஆண்டில் ரூ.5 கோடியை வைப்பு நிதியாக கொண்டு தொடங்கப்பட்ட ஒரு கால பூஜைத் திட்டமானது 2021 ஆம் ஆண்டில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது 12,959 திருக்கோயில்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வைப்பு நிதியாக வழங்கப்பட்டு அதன் வட்டியிலிருந்து பூஜைகள் நடைபெற்று வந்தன. முதலமைச்சர் அவர்கள் ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களுக்கான வைப்பு நிதியை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாகவும், தற்போது ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளார். இதன்மூலம் 18,000 திருக்கோயில்கள் பயன் பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக அரசு ரூ.335 கோடியை மானியமாக வழங்கியுள்ளது. மேலும், இந்தாண்டு ரூ.25 கோடி அரசு மானியத்தில் 1,000 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களுக்கான மின் கட்டணத்தை செலுத்திடும் வகையில் மையநிதி ஏற்படுத்தப்பட்டு துறையே செலுத்தி வருகிறது. ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களில் அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டு வருவதோடு, அவர்களின் பிள்ளைகள் உயர்கல்வி பயில இதுவரை 1,500 மாணவர்களுக்கு தலா ரூ.10,000 கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் ஒருகால பூசைத் திட்டத் திருக்கோயில்களுக்கு ரூ. 15 கோடி செலவில் பூஜை உபகரணங்கள் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். மணியோசை இல்லாத திருக்கோயில்களிலும் இனி மணியோசை கேட்க போகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 32 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் 84 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சுமார் 1,200 சதுரடி பரப்பிலும் குடியிருப்புகள் மிக நேர்த்தியாக கட்டி வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று பல்வேறு மாவட்டங்களில் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எல்லோருக்கும் எல்லாம் என்ற அரசின் தாரக மந்திரத்திற்கு இது ஒன்றே சான்றாகும். இப்படி திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள், பணிபுரிகின்ற அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை பாதுகாக்கின்ற ஆன்மிக அரசாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து வருகின்றது. இன்றைய தினம் புத்தாடைகளை பெற்றிருக்கின்ற அர்ச்சகர்களுக்கும், திருக்கோயில் பணியாளர்களுக்கும் துறையின் அமைச்சர் என்ற முறையில் பொங்கல் திருநாள் நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை, மீனாட்சி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கை வீரவந்தராயர் மண்டபத்தை தவிர்த்து நடத்த வேண்டுமென்றால் வரும் பிப்ரவரி மாதத்திற்குள் நடத்தி விடலாம். வீரவந்தராயர் மண்டபத்தையும் சேர்த்து வரும் மார்ச் மாதத்திற்குள் நடத்திட பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அந்த மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர்கள் மூர்த்தி, தியாகராஜன் ஆகியோரும், அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து உபயதாரர்கள் மூலம் ரூ.5 கோடி நிதியினை ஏற்பாடு செய்து பணிகளை விரைவுப்படுத்தி வருகின்றனர். தற்போது அங்கு பணிபுரியும் ஸ்தபதிகளின் எண்ணிக்கை மூன்று மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. அடுத்த வாரத்தில் நேரடியாக ஆய்வு செய்து வீர வசந்தராயர் மண்டபப் பணிகள் உட்பட அனைத்தையும் முடித்து மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நடத்தப்படும்.

பழனி தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திர திருவிழாவின் 20 நாட்களும் நாளொன்றுக்கு 20,000 பக்தர்கள் வீதம் 4 இலட்சம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும், பழனி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருப்பதிக்கு இணையாக பழனிக்கு தரிசனத்திற்கு செல்பவர்கள் மீண்டும் செல்ல வேண்டும் என்கிற அளவிற்கு தூய்மையை பேணி பாதுகாத்து வருகிறோம். மாஸ்டர் பிளானை பொறுத்தளவில் பழனி திருக்கோயிலில் முதல் கட்டத்தில் 68% பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

இரண்டாம் கட்டத்தை செயல்படுத்துவதற்கு 58 ஏக்கர் நிலம் ரூ.50 கோடி அரசு நிதி வழங்கப்பட்டு தற்போது நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கூடுதலாக பக்தர்கள் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ளது. பழனி தைப்பூசத்தையொட்டி விழாக்கள் இல்லாத பிற திருக்கோயில்களின் இணை, துணை மற்றும் உதவி ஆணையர்கள் கூடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அனைத்து முருக பக்தர்களும் மகிழ்ச்சியடையும் வகையில் தைப்பூச ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்படும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோயில்களில் இறந்து போன 10 யானைகளுக்கு மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருத்தணி திருக்கோயில் யானை மணி மண்டபம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது, விரைவில் திறக்கப்படும். திருக்கோயில்களுக்கு யானைகளை வழங்க வேண்டுமென்றால் வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்படி, பல்வேறு சட்ட, விதிகளை கடைபிடிக்க வேண்டிய நிலை உள்ளது. குறிப்பாக திருக்கோயிலுக்கு ஒருவர் யானையை வழங்க வேண்டுமென்றால் அவர் ஏற்கனவே அந்த யானையை வளர்ப்பதற்கு அனுமதி பெற்று வளர்த்துக் கொண்டிருந்தால் மட்டுமே அவர் விரும்பி திருக்கோயிலுக்கு அளிக்க முடியும்.

அந்த நிலையில் தான் திருக்கோயில்களும் யானைகளை ஏற்றுக் கொள்ள முடியும். நேரடியாக எங்கிருந்தும் யானையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அதே போல் நாங்களாக வேறு மாநிலங்களிலிருந்தும் யானையை பெறுவதற்குண்டான சூழலும் இல்லை. ஆகவே சட்டத்திற்கு உட்பட்டு யானைகளை பெறுவதற்கு செய்தியாளர்களை போலவே நானும் விருப்பத்தோடு இருக்கின்றேன். ஆன்மிகத்தில் யானை ஒரு பாகமாகும். அந்த காலத்தில் மன்னர்கள் போருக்கு கூட யானையை பயன்படுத்தி இருக்கின்றார்கள். நல்லதொரு நிகழ்ச்சிக்கு செல்வதென்றால் அதை மையப்படுத்தி புறப்பட்டால் நல்லது நடக்கும் என்ற ஐதீகம் உண்டு. ஆகவே யானையையும் இறைவனுடைய ஒரு அங்கமாகத்தான் கருதுகிறோம், திருக்கோயிலுக்கு யானை வருவதற்கு இந்த அரசு எந்த வகையிலும் தடையாக இருக்காது. ஆனால் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு உரிய நேரத்தில் திருக்கோயில்களுக்கு யானைகளை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, திருமதி சி.கல்யாணி, சிறப்புப் பணி அலுவலர் சி.லட்சுமணன், இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, திருமதி கி.ரேணுகாதேவி, சு. மோகனசுந்தரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், வார்டு எண்.61, எழும்பூர், ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள பியாஸ் மஹாலில் நடைபெற்ற பொங்கல் விழாவில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், மின் வாரியம் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 1,200 ஊழியர்களுக்கு பச்சரிசி, வெல்லம், நெய், ஏலக்காய், முந்திரி, திராட்சை, காலண்டர் மற்றும் புடவை, வேட்டி, சட்டை உள்ளிட்ட பொங்கல் பொருள் தொகுப்பை வழங்கினார்.